**JUDICIAL MAGISTRATE COURT, No.II CHENGALPATTU**

**CC No. 290 /2020**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE, No.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW 1 |
| Name | : பிரபாகரன் |
| Father's Name | : ராஜாராம் |
| Village | : பாண்டிசேரி |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23 .11.2022.

**குறுக்கு விசாரணை –**

இதே நீதிமன்றத்தில் ஆஜர் எதிரியின் மீது வழக்கு எண் 291/2020 தொடர்ந்து அதற்கு நான் சாட்சியம் அளித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் இரண்டு காசோலைகள் எதிரி கொடுத்ததாக சொல்லியுள்ளேன். இந்த வழக்கிற்கான காசோலைகளின் கடைசி எண்கள் 97 மற்றும் 98 ஆகும். இரண்டு காசோலைகளும் தலா ரூ. 6 லட்சத்திற்கு எதிரி கொடுத்தார். நான் 2017 ஆகஸ்ட் மாதத்தில் அரிசி எதிரிக்கு வியபாரம் செய்ததால் அவர் எனக்கு மேற்சொன்ன காசோலையை கொடுத்தார். நான் வியபாரம் செய்துவருவதை நிருபணம் செய்வதற்காக ஆவணம் என்னிடம் உள்ளது. அந்த ஆவணத்தில் வாடிக்கையாளருக்கு வியபாரம் செய்த அனைத்து விவரங்களும் குறிபிடப்பட்டுயிருக்கும். அந்த ஆவணத்தில் எதிரிக்கு வியபாரம் செய்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவருக்கு தனியாக குறிப்பு இருக்காது மொத்தமாக செய்த வியபாரம் குறித்து விவரம் இருக்கும், ஆனால் எதிரிக்கு

அளித்த ரசீது உள்ளது. மேற்சொன்ன ரசீதை 3 காப்பிகளாகவும், வெள்ளை, மஞ்சள், ரோஸ்(பிங்) நிறத்தில் தயாரிக்கப்படும். வெள்ளை நிற ரசீது வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கப்படும். மஞ்சள் மற்றும் ரோஸ் நாங்கள் வைத்துக்கொள்வோம். எதிரி எனக்கு பணம் கொடுக்கவிலலை. காசோலைகளை தான் கொடுத்தார். எதிரிக்கு உண்டான கணக்கு விவரங்களை குறிப்பிடும் லேட்ஜர் புத்தகத்தினை நான் தாக்கல் செய்யவில்லை. வியபாரத்திற்கு வருமான வரி கட்டடப்பட்டுள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. இந்த நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை வேறு ஒருவர் பார்த்துகொண்டார். என்னை தவிர வேறு எந்த நபரும் வியபாரத்திற்கு உரிய பணத்தினை பெறமாட்டார்கள்.

2. நான் தான் இந்த நிறுவனத்தின் மேலாளர் என்றும் எனக்கு எல்லா விவரமும் தெரிந்து தான் நிறுவனத்தின் சார்பாக இீந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த நிறுவனத்திற்காக வருமான வரி செங்கல்பட்டு ஜோனில் கட்டப்படும் விவரம் தெரிந்துகொண்டேன். அந்த ஜோனின் விவரம் எனக்கு தெரியாது. நிறுவனம் ஜி.எஸ்.டி வரி கட்டியுள்ளது. ஜி.எஸ்.டி மற்றும் வருமான வரி இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல்செய்யவில்லை. கணேஷ் மற்றும் நானும் பிரனாவ் நிறுவனத்தின் பங்குதாரா்கள் என்ற ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பங்குதாரர் ஆவணத்தை பதிவுசெய்யவில்லை. பங்குதாரர் ஆவணம் ஒன்று கணேஷ் மற்றும் பிரபாகரன் ஆகிய நான் எழுதிகொள்ளவில்லை என்றால் சரியல்ல. கல்யாணி மற்றும் கலைவாணி ஆகியோருக்கு இந்நிறுவனம் சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் சமர்பிக்கப்பட்டது. இந்த நிறுவனத்திலிருந்து கல்யாணி மற்றும் கலைவாணி ஆகியோருக்கு வரவு, செலவு மற்றும் இதர ஆவணங்கள் மாற்றப்பட்டுள்ள அதனை நிருபணம் செய்ய என்னிடம் ஆவணம் உண்டு. கல்யாணி மற்றும் கலைவாணி வருமான வரி கட்டியுள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு சரியாக தெரியாது.

**குறுக்கு விசாரணை எதிரி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd. xxxxxx

Judicial Magistrate No.II
Chengalpattu.

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.